பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**13 12 2025** **SATURDAY** **6.30 PM**

## மாநிலச் செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. தனியார் துறை மூலம் ஆராய்ச்சி மற்றும் புதிய கண்டுபிடிப்புகளை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டுள்ளதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

2. தமிழகம் **16** சதவீத ஒட்டுமொத்த உற்பத்தி அளவை எட்டி சாதனை படைத்துள்ளதாக மாநில அரசு கூறியுள்ளது.

3. கர்ப்பப்பை வாய் புற்றுநோய் தடுப்பூசி செலுத்தும் பணி தமிழகத்தில் அடுத்த மாதம் தொடங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

4. திருப்பரங்குன்றம் மலையில் தீபம் ஏற்றுவது தொடர்பான நீதிமன்ற தீர்ப்பை நிறைவேற்றாமல், மக்களை திசை திருப்பும் முயற்சியில் ஆளும் திமுக அரசு ஈடுபட்டுள்ளதாக தமாகா குற்றம் சாட்டியுள்ளது.

5. ஒடிஷா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Isharani Baruah, Unnati Hooda** ஆகியோர் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளனர்.

<u>இனி விரிவான செய்திகள் ---</u>

<<<<<<>>>>

தனியார் துறை மூலம் ஆராய்ச்சி மற்றும் புதிய கண்டுபிடிப்புகளை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று ஆராய்ச்சி மேம்பாடு மற்றும் கண்டுபிடிப்புக்கான நிதியம் குறித்த விளக்க நிகழ்ச்சியில் உரையாற்றிய அவர், இந்த நிதியம் தனியார் துறையினரை ஆராய்ச்சிப் பணிகளில் ஈடுபடுவதை ஊக்கப்படுத்தும் என்று கூறினார்.

ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகளுக்கான கடனுதவி மூன்று சதவீத்திற்கும் குறைவான வட்டியில் வழங்கப்படுவதாகவும் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

<<<<<<>>>>

தமிழகம் 16 சதவீத ஒட்டுமொத்த உற்பத்தி அளவை எட்டி சாதனை படைத்துள்ளதாக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, இன்று அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், தமிழகம் பரப்பளவிலும், மக்கள் தொகையிலும் பெரிய மாநிலம் இல்லை என்ற போதிலும், 16 சதவீத உள் மாநில உற்பத்தி

என்ற வளர்ச்சியை எட்டியுள்ளது வரலாற்று சாதனை என்றும் கூறியுள்ளார்.

கடந்த மூன்றாண்டுகளில் மாநிலம் நிலையான மற்றும் விரைவான வளர்ச்சியை கண்டுள்ளது என்று ரிசர்வ் வங்கி கூறியுள்ளதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மகாராஷ்ட்ரா, கர்நாடகா, குஜராத் போன்ற பெரிய மாநிலங்களைவிட, தமிழகம் அதிக பொருளாதார வளர்ச்சியை எட்டியுள்ளது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

மாநிலத்தில் தனிநபர் வருமானமும் உயர்ந்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

2031-ஆம் ஆண்டில் பொருளாதார ரீதியாக தமிழகம் நாட்டிலேயே முதல் இடத்தில் இருக்கும் என்றும் திரு மு.க.ஸ்டாலின் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>

மகளிர் உரிமைத் தொகை இதுவரை கிடைக்காப் பெறாதவர்கள் மீண்டும் விண்ணப்பிப்பதற்கு கால அவகாசம் வழங்கப்படும் என்று மாநில அமைச்சர் திரு மதிவேந்தன் தெரிவித்துள்ளார்.

நாமக்கல் மாவட்டம் ராசிபுரத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், பெண்களின் வாழ்வாதாரம் இத்திட்டத்தின்மூலம் உயரும் என்று கூறினார்.

<<<<<<>>>>>

தமிழகத்தில் பெண்கள் மேம்பாட்டுக்கான திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருவதாகவும், இதனால் இரட்டை இலக்க பொருளாதார வளர்ச்சியை மாநிலம் எட்டியுள்ளதாகவும் மாநில அமைச்சர் திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

திருச்சி அருகே முடுக்குப்பட்டி என்ற இடத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பெண்களுக்கு தன்னம்பிக்கையை அளிக்கும் வகையில், மாதம் ஆயிரம் ரூபாய் மகளிர் உரிமைத்தொகை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதாக கூறினார்.

மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்குவதற்காக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளதாகவும், இம்மாத இறுதி அல்லது ஜனவரி முதல் வாரத்தில் மாணவர்களுக்கு அவற்றை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்தார்.

<<<<<<>>>>>

கர்ப்பப்பை வாய் புற்றுநோய் தடுப்பூசி செலுத்தும் பணி தமிழகத்தில் அடுத்த மாத இறுதியில் தொடங்கப்படும் என்று மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

சென்னை அம்பத்தூரில் இன்று நடைபெற்ற பல்நோக்கு சிறப்பு மருத்துவ முகாமை தொடங்கிவைத்த பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த நோய் பாதிப்பு அதிகமாக உள்ள அரியலூர், பெரம்பலூர், திருவண்ணாமலை உள்ளிட்ட மாவட்டங்களில் முதல்கட்டமாக கர்ப்பப்பை வாய் புற்றுநோய் தடுப்பூசி செலுத்தும் பணி தொடங்கப்படும் என்று தெரிவித்தார்.

***(Sound Byte — மா. சு — 41 Sec.)***

தமிழகத்தில் ஆறு மாவட்டங்களில் மருத்துவக்கல்லூரிகள் தொடங்க மத்திய அரசிடம் அனுமதி கோரப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மாநிலத்தில் இதுவரை 683 பல்நோக்கு சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டுள்ளதாகவும், இதில் 10 லட்சத்திற்கும் மேற்பட்டோர் பயன்பெற்றுள்ளதாகவும் திரு மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

<<<<<>>>>

மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமனை, மாநில பிஜேபி தலைவர் திரு நயினார் நாகேந்திரன் இன்று புதுதில்லியில் சந்தித்து பேசினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மக்களிடமிருந்து பெறப்பட்ட நிதி அமைச்சகம் சார்ந்த கோரிக்கை மனுக்களை அமைச்சரிடம் வழங்கியதாக தெரிவித்தார்.

<<<<<<>>>>

திருப்பரங்குன்றம் மலையில் தீபம் ஏற்றுவது தொடர்பான நீதிமன்ற தீர்ப்பை நிறைவேற்றாமல், மக்களை திசை திருப்பும் முயற்சியில் ஆளும் திமுக அரசு ஈடுபட்டுள்ளதாக தமாகா தலைவர் திரு ஜி கே வாசன் தெரிவித்துள்ளார்.

ஈரோட்டை அடுத்த திண்டலில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கர்நாடக மாநிலம் மேகதாதுவில் காவிரியின் குறுக்கே அணை கட்டுவதற்கான முயற்சியை மாநிலத்தில் ஆளும் காங்கிரஸ் தொடர்ந்து மேற்கொண்டு வருவதாக குற்றம் சாட்டினார்.

இதனை தடுக்க மாநிலத்தில் ஆளும் திமுக-வும், அதன் கூட்டணி கட்சிகளும் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

மகளிர் உரிமைத்தொகை வழங்கும் திட்டத்தை தேர்தல் அரசியலுக்காக திமுக பயன்படுத்தி வருவதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

தமிழகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி வலுப்பெற்று வருவதாகவும் திரு ஜி கே வாசன் தெரிவித்தார்.

<<<<<<>>>>

இந்திய கடற்படை சார்பில் சென்னையில் நாளை மாரத்தான் போட்டி நடைபெறவுள்ளது.

இதில் 7 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீரர்கள் பங்கேற்க உள்ளதாக பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

21 கிலோமீட்டர் தூரத்திலான அடையாறு மாரத்தான் ஓட்டம் நாளை அதிகாலை நான்கரை மணிக்கும், பத்து கிலோமீட்டர் தூரத்திலான பருந்து மாரத்தான் ஓட்டம் காலை ஐந்தரை மணிக்கும், ஐந்து கிலோமீட்டர் தூரத்திலான பல்லவா மாரத்தான் ஓட்டம் காலை ஆறு மணிக்கும் நடைபெற உள்ளதாக அந்த அமைச்சகம் கூறியுள்ளது.

<<<<<<>>>>

தேசிய தோட்டக்கலை இயக்கத்தின்கீழ் வேளாண் உற்பத்தியை புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்தி அதிகரிப்பதற்கான முயற்சிகளை மத்திய அரசு மேற்கொண்டு வருகிறது.

திருப்பத்தூர் மாவட்டத்தை சேர்ந்த விவசாயி திரு விஜயகிருஷ்ணன், பசுமை குடில் அமைப்பதன் மூலம், அதிக வெப்பம், பூச்சிதாக்குதல் போன்றவற்றிலிருந்து பயிர்களை பாதுகாத்து, அதிக மகசூல் பெற்று வருவதாக தெரிவித்தார்.

***(Sound Byte — விஜயகிருஷ்ணன் —33 Sec)***

<<<<<<>>>>

*மாவட்டச் செய்திகள்*

ராணிப்பேட்டை மாவட்டம் கலவையில் நடைபெற்ற மருத்துவ முகாமில் மாநில அமைச்சர் திரு காந்தி, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

----------------

அரியலூர் மாவட்டத்தில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் சரிபார்ப்புப் பணிகள் நடைபெற்று வருவதை அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முன்னிலையில் ஆட்சியர் திரு ரத்னசாமி இன்று ஆய்வு செய்தார்.

------------------

தென்காசியில் நடைபெற்ற மாற்றுத் திறனாளிகள் தின விழாவில் **35** லட்சத்து **62** ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை **110** மாற்றுத்திறனாளிகளுக்கு மாவட்ட ஆட்சியர் திரு கமல்கிஷோர் இன்று வழங்கினார்.

--------------

காஞ்சிபுரம் மாவட்டத்தில் மின்கம்பியாள் உதவியாளர் பணிக்கான தகுதி தேர்வு நிர்வாக காரணங்களால் மாற்றியமைக்கப்பட்டு வரும் **27-**ஆம் தேதி மற்றும் **28-**ஆம் தேதிகளில் நடைபெறும் என்று ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் தெரிவித்துள்ளார்.

----------------

வேலூர் மாவட்டத்தில் பல்வேறு வழக்குகளுக்கு தீர்வுகாணும் வகையில் மக்கள் நீதிமன்றங்களை பொதுமக்கள் அணுகலாம் என்று மாவட்ட முதன்மை நீதிபதி திரு இளவரசன் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஒடிஷா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Isharani Baruah, Unnati Hooda** ஆகியோர் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளனர்.

மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் **Isharani Baruah 18-21, 21-7, 21-7** என்ற செட் கணக்கில், **Tanya Hemanth**-ஐ வென்றார்.

மற்றொரு ஆட்டத்தில் **Unnati Hooda 18-21, 21-16, 21-16** என்ற செட் கணக்கில் **Tasnim Mir**-ஐ வென்றார்.

இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் கிரண் ஜார்ஜும் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

**<<<<<<END>>>>**